# புத்தாடை வழங்கும் விழா

10.01.2024 அன்று பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நம் கல்லூரி சார்பாக ரிஷியூரில் புத்தாடை வழங்கும் விழா நம் கல்லூரியின் தாளாளர் முனைவர் V. திவாகரன் அவர்கள் தலைமையிலும், முதல்வர் முனைவர் N. உமாமகேஷ்வரி அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. இவ்வினிய விழாவில் ரிஷியூர் கிராம நிர்வாகத் தலைவர் மற்றும் ஊர்ப்பெரியோர்கள் கலந்து கொண்டார்கள். நாட்டுநலப்பணித்திட்ட மாணவிகள் மற்றும் திட்ட அலுவலர்கள், ரிஷியூர் கிராம மக்களுக்கு வீடு வீடாக சென்று ரூ 3,25,000/- மதிப்பிலான பொங்கல் புத்தாடைகளை வழங்கி, புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.